ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

असारे संसारे निजभजनदूरे जडधिया
भ्रमन्तं मामन्धं परमकृपया पातुमुचितम् ।
मदन्यः को दीनस्तव कृपणरक्षातिनिपुण-
स्त्वदन्यः को वा मे त्रिजगति शरण्यः पशुपते ॥

शिवानन्दलहरी ।

ஹே. பசுபதே! மஹாதேவ! உம்முடைய தியானத்திற்கு வெகுதூரததிலிருப்பதாயும் அற்பமேனும் ஸாரமற்றதுமான இந்த ஸம்ஸாரத்தில் அறிவின்மையால் துக்கத்தை சுகமென்று பிரமித்து சுத்துகிறவனும், பொட்டையாயுமிருக்கும் என்னை மிகவும் சிறந்ததான உம்முடைய கருணையால் பாதுகார்ப்பது உசிதமாகும். தீனர்களைரக்ஷிக்கவேண்டுமெனக் கங்கணம்பூண்ட தங்களுக்கு என்னைக்காட்டிலும் தீனனான வேறொருவன் கிடைப்பதரிது இவ்விதம் ஸம்ஸாரத்தில் சுழன்று கஷ்டம் ஸஹிக்கமாட்டாமல் ரக்ஷகர்களைத் தேடிக்கொண்டிருக்கும் எனக்கு மிகவும் கீழான ஸ்திதியிலிருந்து வருந்துவோர்களைப் பாதுகார்ப்பதில் அதிக சக்திபெற்ற தங்களைக்காட்டிலும் வேறு எவர்தான் மூவுலகிலும் சுற்றினும் சரணுகதியடையத் தகுந்தவர் இருக்கிறார். ஒருவருமில்லை. ஆகையால் தாங்களே ரக்ஷிக்கவேண்டும்.

ஸம்ஸாரமென்பது மிகவும் துக்கத்திற்குக் காரணமென்றும் அதில் சுகமிருப்பதாகத் தோன்றினால் அது அக்ஞானத்தால் தோன்றுகிறதென்றும், அதிலிருந்தும் விலக வேண்டுமானால். ஸ்ரீ பரமேசுவரனுடைய அனுக்கிரகத்தால் தான் முடியுமென்றும் நிரூபித்து அவரையே நாம் ஆராதிக்க வேண்டியது முக்கியமென்று கருதி இவ்விதம் பிரார்த்திக்கிறார்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வேதாந்தஸாரம்.

(228-வது பக்கத்தொடர்ச்சி)

ஜகத்தின் உற்பத்திக்கிரம நிரூபணம்.

தமோகுணத்தைப் பிரதானமாகக்கொண்ட விக்ஷேப சக்தியையுடைய அக்ஞானத்தால் உபஹிதமான சைதன்யத்தினிடமிருந்து முதலில் ஆகாயம் உண்டாயிற்று. அந்த ஆகாயத்தினின்றும் வாயுவும், அதினின்றும் தேயுவும், அதிலிருந்து ஜலமும் அதிலிருந்தும் பூமியும் முறையே உண்டாயிருக்கின்றன. "அக்ஞானோபஹிதமான ஆத்மாவினிடமிருந்து ஆகாயம் உண்டாயிற்று" என்பதை ஆதியாகக் கொண்ட தைத்திரீய சுருதி வாக்கியங்கள் இதற்குப் பிரமாணமாகும். கார்யங்களான ஆகாயம் முதலிய பூதங்களில் அதிக ஜாட்யம் காணப்படுவதால் காரணத்திலிருந்தே வந்திருக்க வேண்டுமெனக் கருதி, காரணமான ஈசுவரனுக்குத் தமோகுணப் பிராதான்யம் கூறப்பட்டிருக்கின்றது.

तदानीं सत्वरजस्तमांसि कारणगुणप्रक्रमेण तेषु आकाशादिषु उत्पद्यन्ते ॥

சிருஷ்டிகாலத்தில் ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற இந்த குணங்கள் காரணத்திலிருக்கும் குணங்களை யனுஸரித்து ஆகாயம் முதலான கார்யங்களில் உண்டாகின்றன.

एतान्येव सूक्ष्मभूतानि तन्मात्रस्य पञ्चीकृतानिचोच्यन्ते ॥

விரளங்களான அவயவங்களையுடையதாயும், வேறொன்றின் சம்பந்தமற்றதாயும் இருக்கும் ஆகாசம் முதலான இந்தபூதங்கள்

தாம் அபஞ்சீகிருத பூதங்களென்று சொல்லப்படுகின்றன. இவ்விதமே அடியில் குறிப்பிடும் சுலோகங்களால்

तमःप्रधानप्रकृतिविशिष्टात्परमात्मनः ।
अस्मात्सकाशादाकाशमाकाशाद्वायुरुच्यते ॥ 335
वायोरग्निस्तथैवाग्नेरापोऽद्भ्यः पृथिवीक्रमात् ।
शक्तेः तमःप्रधानत्वं तत्कार्ये जाड्यदर्शनात् ॥
आरभन्ते कार्यगुणान् ये कारणगुणाहि ते ।
एतानि सूक्ष्मभूतानि भूतमात्रा अपि क्रमात् ॥ 337

ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாசார்யாளும் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். இந்த அபஞ்சீகிருத பூதங்களிலிருந்தும் ஸூக்ஷ்ம சரீரங்களும், ஸ்தூலபூதங்களும் உண்டாகின்றன. 17 அவயங்களோடுகூடிய லிங்கசரீரமானது ஸூக்ஷ்ம சரீரமெனப்படும்.

अपंचीकृतभूतेभ्यो जातं सप्तदशाङ्गकम् ।
संसारकारणं लिङ्गमात्मनो भोगसाधनम् ॥ 339

ஐந்தாகச் சேர்க்கப்படாமல் சுத்தமாயிருக்கும் பூதங்களிலிருந்தும் உண்டானதும் பதினேழு அங்கங்களையுடையதாயும் ஸம்ஸாரத்திற்குக் காரணமாயுமிருக்கின்ற லிங்கசரீரமானது ஆத்மாவுக்குப் போக ஸாதனமாகின்றது என்று ஆசார்யாள் கூறுகின்றார்கள்

இவ்விடத்தில் சொல்லப்பட்ட 17 அங்கங்களின் விபரங்களாவன:—ஞானேந்திரியங்கள் 5; கர்மேந்திரியங்கள 5; வாயுக்கள் 5; புத்தி, மனம், 2; ஆக 17. சுரோத்திரம், த்வக், நேத்திரம்' நாக்கு, மூக்கு என்கிற இவை ஞானேந்திரியங்கள். இவைகள் ஆகாசம் முதலான பூதங்களுடைய ஸாத்விகாம்சங்களிலிருந்தும் வெவ்வேறாக முறையே உண்டாகின்றன. நிச்சயாத்மகமான அந்தக்கரண விருத்திக்குப் புத்தி என்று பெயர். ஸங்கற்ப, விகற்பாத்மகமான அந்தக்கரண விருத்திக்கு மனம் என்று பெயர். இவ்விரண்டினுள்ளும் கிரமமாக சித்தமும், அகங்காரமும் அடங்கியிருக்கின்றன.

मनस्यपि च बुद्धौ च चित्ताहङ्कारयोः क्रमात् ।
अन्तर्भावोऽत्र बोद्धव्यः लिङ्गलक्षणसिद्धये ॥ गुरवः ।

என்கிற இந்தச் சுலோகத்தால் சித்தம், அகங்காரம் என்ற இவ்விரண்டும் மனத்திலும் புத்தியிலும் அடங்கியிருக்கின்றன.

எதில் எது அடங்கியிருக்கின்றதென்பதையும் விபரமாய் மேலே அறிவிக்கிறார்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

தானம்.

(240-வது பக்கத்தொடர்ச்சி)

அவ்வேதியர் ஒருநாள் கடைவீதியில் போகும்பொழுது. அங்கொரு மூலையில் ஓர் எளியவன் மிகுந்த பசியுடன்வயிறு ஒட்டி, நாவறண்டு, கண் பஞ்சடைந்து, உட்கார்ந்து கொண்டு, மிகுந்த ஹீனஸ்வரத்துடன் வருவார் போவாரைப்பார்த்து தன் பல்லையெல்லாம் காட்டி அடியில் வருமாறு கூறிக்கொண்டிருந்தான்.

ஸ்வாமி, ஐயனே, அப்பனே, ஏழை அன்னத்தைக் கண்டு ஐந்து நாளாகிறது. பசியோ பிராணனைவாட்டுகிறது என்று கூறிக்கொண்டிருந்தான்.

அவனது நிலைமையைக் கண்ணுற்ற வேதியர் மனமிகவிளகி அச்சமயம் தன்னிடத்திலிருந்த அறையணாவை அவனிடம் கொடுத்து ஏதாகிலும் வாங்கிப் புசிக்கச்சொல்லிப் போனார். அதைப் பெற்ற அவ்வெளியவன் சந்தோஷமிகக் கொண்டு, அடியில் வருமாறு யோஜனைசெய்தான்.—

“இப்பொழுது நம்மிடமிருப்பது அரை அணா. அவ்வரையணாவுக்கு ஏதாகிலும் வாங்கிப் புசிப்போமேயானால் நமக்கிப்

பொழுதிருக்கும் கொடும் பசிக்கு எந்தமூலே? இதைக்கொண்டு நாம் ஏதாகிலும் ஒரு தூண்டில் சம்பாதித்துக் கொண்டு அதனால் அநேகம் மீன்களைப்பிடித்து விற்றுக் கவலையற்று ஜீவிக்கலாம் இதே நல்லவேலை"யென்று உடனே அவ்வெளியவன் கடைக்குப் போய் தூண்டில் ஒன்று சம்பாதித்துக்கொண்டு மீன்பிடிக்க ஆரம்பித்தான். அவனது அதிர்ஷ்ட வசத்தால் அநேகம் மீன்கள் அகப்பட்டன. அவைகளைக்கொண்டுபோய் விற்று அதனால் கிடைக்கும் காசில்தான் சாப்பிட்டதுபோக மிகுதியை சேர்த்து வைத்து, அதனால் ஒருவலையை வாங்கி அப்பால் ஒரு படகும் அதற்கப்பால் அநேகம் பெரிய படகுகளும் வாங்கி அவன் ஒரு பெரிய மீன் வியாபாரியாகிவிட்டான். கொஞ்சநாளில் பெருத்த தனிகனுமாகிவிட்டான். (இவ்வளவிற்கும் காரணம்? வேதியரது அரையணவே)

அவ்வேதியர் சிலகாலம் சென்றதும் இல்லறத்தை வெறுத்து துறவறம் பூண்டு கொடிய தவங்களையியற்றியிருந்து அப்பால் இம்மண்ணுலகை நீத்தனர்.

அவ்வேதியர் தன்ஸ்தூல தேகத்தை விடுத்து சூக்ஷ்ம சரீரத்துடன் அந்தரமார்க்கமாக கைலையை நோக்கிச்சென்று கொண்டிருந்தார். கைலைக்கு சமீபத்தில் சென்றதும் அங்கொரு சிவகணம் நின்றுகொண்டு வழியை மறைத்தது. மழிமறிக்கும் சிவகணத்தைப் பார்த்த வேதியர். அதை நோக்கிக் கேட்கின்றார்.—

ஓ சிவகணமே! நீயேன் என்வழியை மறிக்கின்றாய்?

சிவ—ஐயா நீர்கடந்த ஜன்மத்தில் கொஞ்சம் பாபத்திற்கு ஹேதுவாகவிருந்ததால், அதன் பலனையனுபவிக்கப் பூலோகம் சென்று மானிடரில் கீழ்ஜாதியான சண்டாள ஜாதியிற் பிறந்து, பூர்வஜன்மங்களிற் செய்த சிவபக்தியின் மகிமையினால்—வாசனையினால் அச்சண்டாள ஜாதி ஆசாரத்தை கைவிடாமலேயே சிவபக்திமேலிட்டு, அதின் மகிமையை யாவரும் அறியும் வண்ணம் செய்து, கடைசியாக கைலை வந்து சேர்வீர். இதுஎமது ஐயன் திருவாக்கு அதற்கு எதிர் வாக்கில்லை.

வேதி—அடியேன் செய்த பாவம் யாது? என் மனதார யான் ஒரு பாவமும்—ஒருவருக்கும் ஒரு கெடுதலும்—செய்ததாக—நினைத்தறியேன். ஒருஎறும்பிற்கும் துன்பம்செய்தறியேனே

சிவ—ஓ வேதியரே! கேளும். நீர்கடந்த ஜன்மத்தில் ஒருநாள் கடைவீதியில் போகும்பொழுது ஒரு எளியவனுக்கு அரையணு கொடுத்தீரல்லவா?

வேதி—ஆம்.

சிவ—அதை அவன் என்னசெய்தான் தெரியுமா?

வேதி—தெரியாது. ஏதாகிலும்வாங்கிப்புசிக்குமாறுசொன்னேன்.

சிவ—இல்லை. அப்படிச் செய்யவில்லை. அதைக்கொண்டு அவன் தூண்டில் படகு முதலியன வாங்கி அநேகம் மீன்களின் உயிருக்கு உலைவைத்தான். அவன் அத்தனை ஜீவன்களின் உயிர்களையும் கொல்வதற்கு மூலமாகவிருந்தது நீர் கொடுத்த அரையணுவே.

வேதி—ஐயோ! அவ்வெண்ணத்துடன் யான்கொடுக்கவில்லையே!

சிவ-கொடுப்பவர் எவ்வெண்ணத்துடன் கொடுத்தாலும், அதைக் கொண்டு, பெற்றவன் செய்யும் பாபத்திலோ புண்ணியத்திலோ கொஞ்சம் பாகம் கொடுப்பவரை வந்தடையும், ஆகையால் நீர்கொடுத்த பொருளின்துவாரா அவன் செய்த பாபத்திலும் கொஞ்சம் உம்மைவந்தடைந்தது. அதன் பலனை நீர் அனுபவித்து விட்டால் அப்பால் நேரேகைலைவரலாம். யாதும் தடைகிடையாது.

அவ்வேதியரே அடுத்த ஜன்மத்தில் நாளைப்போவாரென்னும் நந்தனாராகப் பிறந்து, சிவ பக்திபுரிந்து வந்து கடைசியில் சிவ சாயுஜ்யத்தை யடைந்தாரெனத் தெரிகிறது. இதனால் நாம் அறிவது என்ன? ஜீவஹிம்சை கூடாது. மாம்ஸபோஜனம் கூடாது. அன்னதானமே தானங்களிற் சிறந்தது.—குற்றமற்றதும் அன்னதானமே. குற்றம் விடுத்து குணத்தை கொள்ள வேண்டுகின்றேன்.

சுபம்.

மாந்தை, சா. கிருஷ்ணன்.

இந்தியா முன்னேற்றமாம் விழியுங்கள்.

(௨௩-வது பக்கத்தொடர்ச்சி)

இப்போது நம்தேசத்திற்கு வந்திருக்கும்கெடுதி பலமுள்ளது தான் இதைவிலக்க ஒருவனல்ல. இருவர்களல்ல **संघे शक्तिः कलौ युगे** கூட்டத்தில் தான் சக்தி கலியுகத்திற்குண்டு என்ற நியாயப்படி நாம் கூட்டங் கூடித்தான் விலக்கவேண்டும். ஆனால் வெறும் கூட்டங் கூடித்தடி கொண்டடித்து வெருட்டத்தக்க எதிரி நம் முன்னிலையில் நிற்கவில்லை. மற்று கண்களுக்கு புலப்படாமல் மனதால் மட்டிலும் ஊகித்தறியக் கூடிய சத்ரு நமது இருதய குகையில் வீற்றிருக்கிறான். அங்கிருந்தவனை வெருட்ட ஞான மென்னும் தடிதான் வேண்டும். மற்றும் நமக்கு யாதுகெடுதி தோன்றியிருக்கிற தென்பதை யறியாமலே இக்காலத்தியவர் வேலைக்குத்துடங்கி விட்டனர். முற்கூறிய கைத்தொழில் முத லியவைகளின் நாசமே தேசக்ஷேமத்திற்குக் குறைவென்று தெரி யவில்லையோவெனின் அது தான் குறை. அதைத்தான் போக்க வேண்டும். ஆனால் அதைப்போக்க இப்போது அனுஷ்டிக்கப் படுவதுதான் தவறு. ஏனெனில் முக்காலத்தில் நம் தேசத் தில் அவை அழகாய் செழித்தோங்கியிருந்தன வென்றுதான் நாங்களும் ஒப்புக்கொண்டோம். அக்காலத்தில் அது எவ்விதம் யாரால் கையாளப்பட்டது இன்னும் அக்காலத்தில் எவை இருந் தன. இப்போது அவை இருக்கின்றனவாவென்று பாருங்கள் முற்காலத்தில் கைத்தொழில்கள் நன்கு தழைத்தோங்கின. அத் துடன் வர்ணாசிரமதர்மம்என்ற மூலமருந்துஅழகாய்உரம் கொடுத் துக்கொண்டிருந்தது. இப்போதோ அதற்குத்தான் ஹானியேற் பட்டுவிட்டது. இனி உரமில்லாத பயிர் போல்தான் மற்றவை விளங்குமென்பதை ஊன்றிப்பாருங்கள். இப்போது உலகமுன் னேற்றத்திற்காகப் பாடுபடும் மகான்கள் இந்த உரமில்லாமல் பயிரை வளரச்செய்கிறோமென்கின்றனர். வேறு உரம் என்ன வென்றால் அதில் நெருப்பைப் போடுவதுதான் என்கின்றனர். என்ன நியாயம் எவ்விதம் இதை ஏற்றுக் கொள்வது ? நல்லது

இவ்விதம் நம் இந்தியாவில் எக்காலத்திலாவது வர்ணதர்மம் இல்லாமல் உலகம் முன்வந்ததாய் பாரதம் ராமாயணம் முதலிய கிரந்தங்களிலிருந்தாவது வேதம் உபனிடதங்களிலிருந்தாவது பிரமாணம் காண்பிப்பார்களா ? ஓரிடத்திலும் காணமுடியாது. நம் தேசத்திற்கு முற்காலங்களில் கெடுதல் எத்துணையோ தடவை நேர்ந்திருக்கிறது. தேசத்திற்குக்கெடுதல் வருமுன் மதத்திற்குதான் தளர்வு ஏற்படும். பிறகு அதைப்போக்குவதற்கவதரிக்கும் பகவானும் அதைச் சீர்திருத்தித் துஷ்டனேயும் ஸம்ஹரிப்பார். ராவணன் பிர்மகுலத்தில் பிறந்தும் வேத வேதாங்கங்களேக்கற்றும் பரமசிவனிடமாழ்ந்த பக்திசெலுத்தியும் ராக்ஷஸத்தன்மையை விடாமல்பிராமணர்களேயும் ரிஷிகளேயும்யாகம்முதலியநற்கன்மங்களேயும்அழித்ததால் ஸ்ரீ ராமன் அவதரித்து முதலில் விசுவாமித்திரருடன் போய் நற்கன்மங்களுக்கு ஏற்படும் தீங்கையும் அத்தீங்கு செய்பவர்களின் கொடிய பாபச்செயலேயும் கண்ணுற்று இனி இப்பாபச் செயல் உள்ளவர்கள்யாராயினும் இறக்கமின்றி வதைத்திடுவேனென்ற எண்ணத்தால் முதலில் ஸ்திரீயென்றுசற்று மயங்கின போதிலும் ஆகா ! இங்கு தயைக்கு இடமில்லேயென்று கூசாமல் தாடகையைக் கொன்றூர். பிறகு ராவணசம்ஹாரம் வரை செய்து ஸாதுக்களுக்கு தைரியத்தைக் கொடுத்து வழக்கம் போல் யாகாதி கன்மாக்களே வளரச்செய்து உலகத்தை க்ஷேமம் பெறச் செய்தனர். சாதுர்வர்ணியத்தையும் முன்போல் நிலே நாட்டினர் என்றல்லவா ராமாயணத்தின் முடிவு. இதுபோல் எந்த அவதாரக்கதைகளிலும் பார்க்கலாம். மதத்திற்குத் தளர்வு முதலிலும் அதன் பின் தேசக்ஷேமத்திற்குக் குறைவும் தான் வரும். உத்தமகுலத்திற் பிறந்தவனுயிலும் மதப்பற்றை விட்டுவிட்டு தன் யுக்தி புத்திவன்மையாலும்பேச்சின் சாதுர்யத்தாலும் வேறுவிதமான தியாகத்தாலும் பலரை வசப்படுத்திக் கொண்டு உலகத்தை வஞ்சிக்கிறேனென்று சொல்வதற்கு பதிலாய் லோகக்ஷேமத்திற்குப் பாடுபடுகிறேனென்று சொல்லித்திரிந்தால் பிர்மாவுக்குப் பேரனுயும் விச்ரவஸ் என்ற உத்தம பிர்மரிஷியின் புதல்வனுயுமிருந்த ராவணன்போல் தானென்று கூறவும் வேண்டுமோ. இதற்கு முன் நம் பாரத வருஷத்தில் மகம்மதியர்

களால் நமக்குக் கேடுவிளைந்தது. அப்போது நமது மதத்திற்கும் கோயில்களுக்கும் அனர்த்தம் ஏற்பட்டது. பிறகு ஆங்கில அரசாக்ஷி வந்தது. அதனால் ஒருவிதத்திலும் பல துன்பங்களடங்கியும் மதத்திற்கேற்பட்ட துன்பம் ஒழிந்தபாடில்லையென்று நம் முன்னோர்கதறிய கூக்குரல் 8000 மயிலுக்கப்புறம் வீற்றிருந்த நமது மாக்ஷிமை தங்கிய மகாராணியவர்களின் காதில் தைத்தது. உடனே அதை சகியாது நமது மதவிஷயத்தில் யாதொரு நிபந்தனையும் செய்யாமலிருக்கும்படி உத்தரவிட்டனர். அது முதல் நாளது வரையில் குறைவின்றி வந்தது. இப்போது அம்மையாரின் உறுதிமொழிக்கு ஆட்டம் கொடுத்திருக்கிறது. மதப்பற்று நமக்கும் குறையயேற்பட்டது. உலகத்திற்கும் அனர்த்தம் தலைகாட்டுகிறது. இதைத்தவிர வேறுண்டோ?

(தொடரும்)

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.

தீண்டாமை விலக்கு.

(222-வது பக்கத்தொடர்ச்சி)

சுயமதிப்பு இவ்விஷயமாய் அடுத்துவரும் இருகேள்விகளும் மகாத்மா காந்தியினது பதில்களும் பின்வருமாறு:—

"கே:—தீண்டத் தகாதவரெனப்படுவோர் மானிடர் என்ற ஹோதாவில் தாங்கள் பெற்றிருக்கும் உரிமையின் காரணமாக பிராமண அக்கிரஹாரங்களில் அணிவகுத்து ஊர்வலமாகச் செல்லும்படி செய்யப்படுவதினால் அவர்களது பசியாறிவிடுமா?

ப:—மனிதன் உணவினால் மாத்திரம் வாழவில்லை. உணவைவிட சுயமதிப்பே உயர்ந்ததெனக் கொள்வோர் பலர் இருக்கின்றனர்.

கே:—பலாத்காரமற்ற ஒத்துழையாமையின் தத்துவமனத்தையும் உணரும்படி தீண்டத்தகாதவர்கள் அவ்வளவு படிப்பாளிகளாக இல்லாதிருப்பதாலும், பிராமணர்கள் ராஜீய விஷயங்களைவிட தங்களது மதத்திலேயே அதிகமானசிரத்தைகொண்டிருப்ப

தினுலும் பிராமண அக்கிரஹாரங்களில் தீண்டாதவர்கள் பிரவேசிப்பதற்காகச் செய்யும் சத்தியாக்கிரஹமானது பலாத்காரத்தில் கொண்டுபோய் விடுமா? இல்லையா?

ப:-இதன்மூலம் நிரூபர் வைக்கம் சத்யாக்ரஹத்தைக்குறிப்பிடுகின்ருர் என்ருல் தீண்டத் தகாதவரெனப்படுவோர் அதிசயப்படதக்க முறையில் பொறுமையுடன் நடந்து வருகின்றனர் என்பது அனுபவத்தாலேயே தெரியவந்திருக்கிறது. கேள்வியின் பிற்ப (குதியிலிருந்து பிராமணர்கள் பலாத்கார முறையில் இறங்கக் கூடுமென்று எண்ண இடமேற்படுகின்றது. அவர்கள் பலாத்கார முறையில் இறங்கினுல் நான் வருத்தப்படத்தான் வேண்டியிருக்கும். அப்பொழுது அவர்கள் மதத்தினை மதித்ததாக நான்கருதமாட்டேன். ஆனுல் அவர்கள் தங்களுக்கும் மதத்தைப்பற்றி ஒன்றும் தெரியாதென்பதையும் அதனிடத்து தங்களுக்குள்ள இகழ்ச்சியையும் காட்டிவிட்டார்கள் என்றும் நான் கருதுவேன்."

முதல் கேள்வியில் கண்ட, "பசியாறிவிடுமா," என்பதற்கு 'வயிற்றுப்பசி' என்ற அர்த்தத்தில் பதில சொல்லப்பட்டிருக்கிறது. பதிலில் கண்ட சுய மதிப்பையும் சேர்த்து, அர்த்தம் செய்வதுதான் உசிதமாயிருக்குமென்று தோன்றுகிறது. பதிலைக் கொண்டு சுயமதிப்புக்கு (தான்) என்ற எண்ணம் அர்த்தமாக வேண்டும். அப்படியானுல் அது நம சாஸ்திர ரீதியாயும், அனுபவத்தினுலும்; நன்மை பயக்கத்தக்கதல்ல. இரண்டாவது பதிலின் பிற்பகுதியிலிருந்து பிராமணர்களின் இதே எண்ணத்தைக் கண்டிப்பதாகப்படுகிறது. எந்த அர்த்தத்தில் உபயோகித்திருந்த போதிலும்ஒருவரை ஒருவர் தொட்டுக்கொள்ளுவதால்சுயமதிப்பு உண்டாய்விடாது. தொட்டுக்கொள்ளாமலிருப்பதால் சுயமதிப்புக் குறைந்தும் விடது.

உதாரணமாக:—நமது வர்ணுசிரம தர்மங்களுக்கு ஸ்திரீகளின் கற்பு முக்கிய காரணம். சொந்த ஸ்திரீகள் அல்லாதார்களை புருஷர்கள் பரிசிப்பது பெரிய குற்றம். இவ்விஷயத்தில் ஹிந்துக்களைக் காட்டிலும் மஹமதியரின் விதிகள் மிகவும் கடுமையானவை ஸ்திரீகளை தீண்டத் தகாதவர்களைக் காட்டிலும் கேவலமாக நடத்

துவதாக மேல் தேசத்தார்களுடையவும், அவர்களை அனுசரித்த வர்களுடையவும் அபிப்பிராயமாயிருக்கிறது. மேற்கு தேசத்தில் (டைவர்ஸ் கோர்ட்) விவாகப்பிரிவினை செய்து வைக்கும் கச்சேரி களிருப்பதுபோல இங்கில்லாதது ஒரு குறையென்று அவர்கள் கருதுகிறார்கள் போலும். தொடாமலிருப்பதால் சுயமதிப்புக் குறையும் என்ற நீதியாய் ஸ்திரீகளைத் தொடாமலிருக்கும் வரை யில் அவர்களுடைய சுயமதிப்புக்குக் குறைவுதானே. "தீண் டாமை விலக்கு" பிரசாரம்போல் "ஸ்திரீகள் தொடாமைவிலக்கு" பிரசாரத்தையும் ஆரம்பித்துவிட்டால் உண்மையான இந்தியரின் சுயமதிப்பு நன்கு வெளிப்பட்டுவிடும். அவரவர்களுக்குக் கேற் பட்ட வரையறைக்குட்பட்டிருந்தால் மட்டில் சுயமதிப்பு நிலை நிற்கும். பிராமணர்களிலும் மற்ற ஜாதி ஹிந்துக்களிலும் ஸ்திரீ கள் மாதத்தில் ஒருமுறை வெளியே இருக்குங்காலத்தில் மூன்று நாள் தீண்டா வகுப்பினரிலும் கேவலமாயிருக்கிறார்கள். அத னால் அவர்கள் சுயமதிப்புக் குறைந்ததாய் பாவிக்கவில்லை. இதை மாற்றிவிடலாமா யென்று மேற்குதேச சாஸ்திர ஆராய்ச்சிக்காரர் களைக் கேட்டால் தெரியும்.

நந்தன் தமதுஜாதி ஸ்திதியிலிருந்துகொண்டேதான் உத்தம கதியை அடைந்தார். அவருக்குச் சுயமதிப்புக் குறைந்தாவிட் டது. அவருடைய சரித்திரம் புகழுடன் போற்றப்பட்டு வரு கிறது.

மகா ஞானியான விதுரர் தன் ஜாதிக்குள்ள தர்மங்களினின் றும் வழுவாமலிருந்தே மிகவும் புகழடைந்தார்.

அவர்களுக்கு பிராமணர்களில் எல்லோருக்குமிராத யோக் கியதை இருந்தபோதிலும் தங்கள் தங்கள் தர்மத்தினின்றும் நழு வாமலிருந்ததாலேயே மதிப்பை அடைந்தார்கள். அப்படிக்கல் லாமல் மீறுவதால் உலகத்துக்கே தீங்கு விளைவித்தவராவார்கள் என்பதை ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு கீதையில் உபதே சிக்கிறார்.

कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः ।
लोकसंग्रहमेवापि संपश्यन्कर्तुमर्हसि ॥

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥
सक्ताः कर्मण्यविद्वांसो यथा कुर्वन्ति भारत ।
कुर्याद्विद्वांस्तथाऽसक्तश्चिकीर्षुर्लोकसंग्रहम् ॥

அதன் பொருள் பின்வருமாறு:—

"தனக்கு யோக்கியதையிருக்கிறதென்று கட்டுப்பாட்டுக்கு மீறிநடந்தால் சாதாரண ஜனங்களும் அதையே பிரமாணமாகக் கொண்டு அம்மாதிரிநடக்க ஆரம்பிப்பார்கள். அதனுல் உலகம் கெட்டுவிடும். ஆகையால் அறிந்தவனும் லோகக்ஷேமத்தை உத்தேசித்து தனக்கேற்பட்ட கடமைகளை பற்றுதலில்லாதவனுய் எல்லோரையும்போல் செய்யவேண்டும்."

ஒருவரையொருவர் தொட்டுக்கொள்ளாததற்காக அவமதிப்புண்டென்று நினைப்பது சரியாய்த்தோன்றவில்லை. அப்படி அவமதிக்கக் கூடாதென்று மனு கண்டிருக்கிறுர்.

हीनाङ्गानतिरिक्ताङ्गान्विद्याहीनान्वयोऽधिकान् ।
रूपद्रव्यविहीनांश्च जातिहीनांश्च नाक्षिपेत् ॥

அங்கம், வித்தை, அழகு, பணம், ஜாதி இவைகளில் குறைவுள்ளவர்களை அவமதிக்கக்கூடாது என்பது இதன் பொருள்.

ஆசார சீர்திருத்தக்காரர்களால் போற்றப்படும் காளிதாஸ கவியும், "தனக்குரித்தாயுள்ள கர்மா நிந்திக்கப்படுவதாயிருந்தாலும் அதை விட்டுவிடக்கூடாது" என்கிறுர். ஆகையால் அவனவனுக்கேற்பட்ட வகுப்பில் அடங்கியிருப்பதுதான் பெருமையேயொழிய அதைவிட்டு விலக நினைப்பது சுயமதிப்பை யுண்டு பண்ணிவிடாது. மற்ருெரு கேள்வியும் பதிலும் பின்வருமாறு:—

கே—ஜாதி,மதம்,வகுப்பு, தொழில் வித்யாசமின்றி எல்லோரும் சமமாயிருக்க வேண்டுமென்று தாங்கள் கூறுகின்றீர்களா?

பதில்—ஜாதி மத நிற வித்தியாசமின்றி எல்லோருக்கும் தாகம் பசிபோன்ற சில பொதுவான விஷயங்கள் இருப்பது போல் மூலாதாரமான உரிமைகள் விஷயத்தில் எல்லோரையும் சட்டம் ஒன்ருகத்தான் பாவிக்கவேண்டும்.

ஆம். இதில் என்ன ஆக்ஷேபனை? அதுதான் நமது சாஸ்திரங்களின் நோக்கம். ஒவ்வொருவரும் மற்றவரின் க்ஷேமத்தில் அக்கரையுள்ளவராயிருப்பதுடன் மேல் வர்ணத்தார்கள் மற்றவர்களிடம் இன்னும் அதிகச் சலுவை காட்டவேண்டும் யென்பது தான் நமது சாஸ்திரங்களின் கட்டளை. இதற்கும் ஒருவரை ஒருவர் தொட்டுக்கொள்வதற்கும் என்ன சம்பந்தம்?

மற்ெருரு பதிலில் "இத்தனை பாதுகாப்பும் வேண்டியிருக்கும். ஆத்மார்த்திகத்தன்மை, ஆத்மார்த்திகத் தன்மையாகவே இருக்கமுடியாது" என்ருர். இதுவும் வாஸ்தவம்தான். ஆத்மார்த்திகத்தன்மை அடைந்தவனுக்கு மனிதனுக்கும் மாட்டுக்கும் கல்லுக்குங்கூட வித்தியாசமிருக்கக்கூடாது. உதாரணமாக

विद्याविनयसम्पन्ने ब्राह्मणे गविहस्तिनि ।
शुनिचैव श्वपाके च पण्डितास्समदर्शिनः ॥
समदुःखसुखस्स्वस्थस्समलोष्टाश्मकाञ्चनः ।
तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिन्दात्मसंस्तुतिः ॥

என்று முன்சொன்ன கீதையிலேயே உதாகரிக்கப்படுகிறது.

இது மிகவும் உயர்ந்த ஸ்திதி. உலகம் நடப்பதற்கும் இந்த ஸ்திதிக்கும் சம்பந்தமில்லை. காந்தியை இந்த ஸ்திதியிலிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அவர் உபதேசத்தை கேட்பவர்களெல்லாம் இதே ஸ்திதியிலிருப்பவர்கள்தானு? அப்படியானல் இப்பிரசாரங்கள் செய்யவேண்டியேயிராது. காங்கிரஸ்ஸும் கவர்ன்மெண்டும் வேண்டியிராது. அதிகாரிகளுக்குத் தகுதியற்ற உபதேசம் செய்வதில் அனர்த்தங்களுண்டாய்விடும். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லலாம். கொலைக்குற்றம் செய்தவனைத் தூக்கிலிட செஷன் ஜட்ஜிக்கு அதிகாரமிருக்கிறது. ஜட்ஜிகள் சிலசமயம் பிசகு செய்துவிடுகிருர்கள். ஆகையால் இத்தண்டனையை யாரும் செய்ய அதிகாரமிருக்கவேண்டும்; நியாயமான தண்டனையை யார் செய்தாலென்ன என்று பிரசாரம் செய்து சட்டத்தையும் திருத்திக் கொண்டால் என்ன அனர்த்தங்கள் விளையுமோ அவைகள்தான் இப்பிரசாரத்தாலும் விளையும். காந்தி ஒரு பஞ்சமப் பெண்ணைத் தான் ஆசிரமத்தில் வளர்க்கிருர். குஷ்ட

ரோகிகளை மனங் கூசாமல் ஸ்பரிசிக்கிறார் என்ற இவைகளெல்லாம் விசேஷமாய் அவருக்குள்ள ஆத்ம சக்தியைக் காட்டுகின்றன. அவரைப்போலவே எல்லாரையும் நினைத்து சீர்திருத்த முயற்சிப்பது சரியல்ல.

கடைசியாயிருக்கும் கேள்வியும் பதிலும் எல்லாவற்றையும் விட முக்கியமானவை. அதாவது:—

கே:—தங்களுடைய கர்மத்தைப் பூர்த்திசெய்தவர்களாக உள்ள மகாத்மாக்கள்தான் அம் மகத்தான வேதாந்த தத்துவத்தை உணர்ந்து அனுஷ்டிக்ககூடுமென்று, சாதாரண கிரகஸ்தர்கள் பிறப்பில்லாத ஸ்திதிக்குக் கொண்டு போய்விடக்கூடிய கட்டுப்பாடுகளை அளிக்கக்கூடியதாய் உள்ளதாயும், ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டதாயும் உள்ள விதிகளின்படி நடக்க வேண்டியவர்களாயும் இருக்கின்றனர் என்ற மஹத்தான வேதாந்த உண்மையானது அவனுக்கு (சாதாரண கிரகஸ்தனுக்கு) அனுஷ்டானத்தில் ஏதேனும் உபயோகப் படக்கூடுமா?

ப:—பிறப்பால் எவரையும் தீண்டத் தகாதவரெனக் கருதக் கூடாதென்ற சுலபமானதத்துவத்தை அங்கீகரிப்பதற்கு "மஹத்தான வேதாந்த தத்து வத்தை" உணரவேண்டுமென்ற அவசியமில்லை. இந்த தத்துவமானது மிக்க எளிதாக இருக்கின்றது இதனை வைதீக ஹிந்துக்களைத் தவிர உலகின் இதர பாகங்களில் உள்ளவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர் என்பதிலிருந்தே இதன் எளிய தன்மை விளங்கும். நாம் தற்சமயம் கையாண்டு வருகின்றபடியுள்ள தீண்டாமை முறையைக் கையாளும்படி ரிஷிகள் உபதேசித்தனர் என்று கூறுவதை நிரூபிக்கும்படி நான் கேட்டிருக்கிறேன்"

கேள்வி சரியாயும் அர்த்த புஷ்டியுள்ளதாயுமிருக்கிறது. பதிலின் முதல் வாக்கியத்தில் கண்ட "சுலபமான" என்பது "பெரிய" என்றும், "உணர வேண்டுமென்ற அவசியமில்லை" என்பது "உணர வேண்டியது அவசியம்" என்றும் இருந்தால் பதிலும் சரியானதாய்த்தானிருக்கும். தொடர்ந்து வரும் வாக்கியங்களும் பொருத்தமாயில்லை. "உலகின் இதர பாகங்களில் உள்ளவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர் என்பதிலிருந்தே இதன் எளிய

தன்மை விளங்கும்" என்பதிலிருந்து நமது மதக்காரியங்களுக்கு வெளிதேசத்தவர்களை ஆதாரமாகக் கூறுவதுபோலிருக்கிறது. இவ்விடத்தைத் தவிர வேறு இடத்தில் இவ்வார்த்தைகளிருந்தால் அவைகளை மகாத்மா காந்தியினதென்று நினைக்கக்கூடாததாயிருக்கும். கடைசிமுடிவில் நாம் தற்சமயம் கையாண்டுவருகிறபடியுள்ள தீண்டாமை முறையைக் கையாளும்படி ரிஷிகள் உபதேசித்தனர் என்று கூறுவதை நிரூபிக்கும்படி நான் கேட்டிருக்கிறேன் என்று மகாத்மா குறிப்பிட்டிருக்கிறார். இச்சமயத்தில் ஒன்று சொல்லத் தோன்றுகிறது. ஒருவரையொருவர் தொட்டுவிட்டால் அதற்குதண்டனையுண்டென்றுபினல்கோடில்லை ஆனாலும் ஒரு பகுதியினர் மேல் ஜாதியினரெனக் கருதி அவர்களைத் தொடக்கூடாதென்று தாங்களாகவே விலகுகிறார்கள். அப்படி தொட்டுவிட்டால் தாங்கள் தவறுதல் செய்துவிட்டதாகக் கருதுகிறார்கள். மேல் ஜாதியினரும் தாங்கள் அசுத்தப்பட்டுவிட்டதாகக் கருதுகிறார்கள். இவ்வளவு வரையில் நிலைமை ஸ்திரப்பட்டுப் போயிருக்கிறது. மகா பாரதத்தில் வனபருவததில் யட்சன் யுதிஷ்டிரரை 4-141 "எது வழி" என்று கேட்டதற்கு யுதிஷ்டிரர் சொன்னதாவது:—

तर्कोऽप्रतिष्ठः श्रुतयो विभिन्नाः नैको मुनिर्यस्य मतं प्रमाणम् ।
धर्मस्य तत्वं निहितं गुहायां महाजनो येन गतस्सपन्थाः ॥

'யுக்தியோ நிலையற்றது. வேதங்களோ சிதறுண்டிருக்கின்றன. எவருடையமதம் பிரமாணமென்று கொள்ளுவதற்கு ரிஷியோ ஒருவரல்ல. தர்மத்தின் உண்மை குகையில் மறைந்திருக்கின்றது. ஆகையால் மகாஜனங்கள் அனுஷ்டிக்கும் மார்க்மே வழி' என்று சொன்னார். இந்நிலையில் "தற்சமயம் கையாண்டு வரும் முறையை" அடியோடு மாற்றுவதற்கு ருஜூப் பொறுப்பு யாரைச்சேர்ந்தது என்று சற்று நிதானிக்கவேண்டும். மேல் கண்ட ஆதாரமே போதுமென்றாலும் மற்றும் சிலவற்றைக் குறிப்பிடுவது விரும்பத்தகாததன்று. மனு பின்கண்டபடி விதிக்கிறார்:—

चण्डालश्वपचानां तु बहिर्ग्रामात्प्रतिश्रयः ।
नतैः समयमन्विच्छेत् पुरुषो धर्ममाचरन् ॥

இதன் பொருள்— "சண்டாளர் முதலியவர் கிராமத்திற்கு வெளியிலிருக்கவேண்டும்" ......அவர்களுடன் தர்மத்தை யனுசரிக்கும் புருஷன் விவகாரத்தை இச்சிக்கக் கூடாது "

இன்னும் கோர்ட்டுகளில் ஆதாரமாகக் கொள்ளப்படும் விக்ஞானேஸ்வரர் எழுதிய "மிதாட்சரீ" யில்

चण्डालं पतितं चैव दूरतः परिवर्जयेत् ।
युगं च द्वियुगं चैव त्रियुगं च चतुर्युगं ।
चण्डालसूतिकोदक्या पतितानामधः क्रमात् ॥ என்று

ஆங்கிரஸர் பிருகஸ்பதி இவர்கள் சொன்னதைக் குறிப்பிடுகிறார்.

இதன் பொருள்:— "சண்டாளனையும் பதிதனையும் தூரத்தில் விலக்கவேண்டும். பதிதர்களை ஒரு நுகத்தடி தூரமும், ரஜஸ்வலைகளை இரு நுகத்தடி தூரமும், பிரசவித்த ஸ்திரீகளை மூன்று நுகத்தடி தூரமும், சண்டாளர்களை நான்கு நுகத்தடி தூரமும் விலக்கவேண்டும்."

நமது சாஸ்திரங்களும், சிஷ்டாசாரங்களும் உலகக்ஷேமத்தை யுத்தேசித்து எல்லாவழிகளாலும் நன்றாய் ஆராய்ந்தறிந்த பிறகே ஏற்படுத்தப் பட்டவையென்பது மேல் தேசத்தார்களால் நவீன சாஸ்திர ஆராய்ச்சி முறையால் கண்டு பிடிக்கப்பட்டு வரும் பல சில்லரை விஷயங்களிலிருந்தே வெளிப்பட்டுவருகிறது. ஆகையால் செய்ய விரும்பும் எந்தத் திருத்தத்தையும் பின்னொரு காலத்தில் வருந்தத்தகாத விதமாய் எல்லாவற்றையும் தீர ஆலோசித்துச் செய்வதே விவேகமாகும்.

முடிவுரை.

தேசமுன்னேற்றத்தைக் கருதிச் செய்ய விரும்பும் எத்திருத்தங்களையும், எப்படித் திருப்பித்திருப்பி யோஜிக்கினும் ஸநாதந தர்மங்களைப் பின்பற்றிச் செய்வதுதான் யுக்தமென்றும் அதுவே சாஸ்திரமான அஸ்திவாரத்தின் மேல் கட்டும் கட்டடத்திற்கொப்பாக விளங்குகிறது. கீழ் கண்டது என் பிரார்த்தனை.

आर्यावर्तोद्धरणे व्यग्रैरार्यैस्स सेव्यतां धर्मः ।
देशोन्नतिस्स्वराज्ये स्यातां तेनैव झटिति संसिद्धे ॥

வா. பஞ்சாபகேசய்யர்.